Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

ஏடு 7 (17-12-65) இதழ் 308

விசுவாவசு மார்கழி 2 ஷஃபான் பிறை 23 வெள்ளிக்கிழமை




## பழிக்குப்பழி இரத்தத்திற்கு இரத்தம்

ஹாங்காங், டிச. 16

'அமெரிக்கா, எங்கள் மக்களுக்கு இரத்தக்கடன்பட்டிருக்கிறது' என சீனு கூறியிருக்கிறது.

'கடந்த நவம்பர் 30-ந் திகதியும், டிசம்பர் 1-ம் திகதியும் சீனப்படைகள் மீது நடுக்கடலில் அமெரிக்கா குண்டு வீசி 8 மீனவர்களைக் கொன்றது. சீனமக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. சீனமக்களின்

(6-ம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கைச் செலவை குறைக்க திட்டம் தயார்

## அமைச்சர்கள் தயரித்துள்ளதாக உடுப்பிட்டி எம். பி. தகவல்

பம்பலப்பிட்டி, வியாழன்

வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பதற்கான திட்டம் தயாராகிவருகிறது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்கவும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும் தேசிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பல இடங்களுக்கும் சென்று பலரையும் சந்தித்து தகவல்கள் சேகரித்துவருகின்றனர்.

இத்தகவலை உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் மருதானை பஞ்சிகாவத்தையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

## 'வினுத்தாள்கள் வெளியாவதை தடுப்பது கஷ்டம்'

பம்பலப்பிட்டி, வியா.

நாட்டுமக்கள் நேர்மையுடனும், நம்பிக்கையுடனும் நடந்துகொள்ளாவிட்டால் பரீட்சைக்கு முன்னரே விஞத்தாள்கள் வெளியாவதைத் தடைசெய்வது கஷ்மானது என்று விஞத்தாள்கள் முன்னரே வெளியாவது பற்றி குறிப்பிடுகையில் கல்வி மந்திரி தெரிவித்தார்.

பரீட்சை விஞத்தாள்கள் முன்னரே வெளியானது பற்றி பரீட்சைப் பகுதியும், பொலிஸ் பகுதியும் தீவிரமாக விசாரித்து வருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

பரீட்சை விஞத்தாள்களை விநியோகிப்பதில் 8000பேர் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள் என்றும் பரீட்சை தொடங்குவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னர் விஞப்பத்திரங்கள் அனுப்பப்படுகின்றன என்றும் இவர்களில் ஒருவர் நேர்மையற்ற முறையில் நடந்துவிட்டால் முழுவதும் தலைகீழாக மாறிவிடுகிறது' என்றும் அவர்குறிப்பிட்டார்.

பரீட்சை விஞத்தாள்கள் வெளியானதுபற்றி விசாரணைசெய்யும் இரகசிய பொலிஸார் தங்கொடவில்லையைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்குவைத்தேடிச் சென்றனர். இந்தப் பிக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் எனவும் பிரிவினு பல்கலைக்கழகத்தில் இவர் கல்வி பயில்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புகழ்பெற்ற எழுத்தாளர் சொமர்ஸட் மோம் காலமானுர்

### கோடிக்கணக்கான இலக்கிய ரசிகர்களை கவர்ந்தவர்

நீஸ், டிச. 16

உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சோமர்ஸட் மோம் தனது 91-வது வயதில் இன்று காலமானுர். கடந்த சனிக்கிழமை முதல் பிரெஞ்ச்ர வீராவிலுள்ள நீஸில் பல வைத்திய நிபுணர்கள் அவருக்கு சிகிச்சை அளித்துவந்தனர். ஆனுல் கடந்த 6 தினங்களாக பிரக்ஞையற்ற நிலையில் இருந்தபின் அவரது மரணம் சம்பவித்தது.

திரு. மோம் எழுத்துத்துறையின் சகல அம்சங்களிலும் மிகவும் புகழ்பெற்றிருந்தார். அவர் தலைசிறந்த நாவலாசிரியர். பெரிய நாடகாசிரியர். கதாசிரியர். இலக்கியத்தின் இன்னும் பல துறைகளிலும் அவர் விற்பன்னர்,

கடந்த 60 ஆண்டுகளாக உலகெங்கும் அவரது நூல்களை கோடிக்கணக்கான மக்கள் விரும்பிப்படித்து வந்தார்கள்.

23 வயது வைத்திய மாணவனுய் இருந்தபோது அவரது முதல்நூல் வெளியாயிற்று. அதுமுதல் 30 நாடகங்களும், அதே அளவு நாவல்களும், நூற்றுக்கணக்கான கதைகளையும் அவர் எழுதியுள்ளார்.

அவரது புத்தகங்கள் 8 கோடி பிரதிகளுக்குமேல் விற்பனையாயின.

உலகின்தலைசிறந்த இலக்கியகர்த்தாவான மோம், எழுத்துத்துறையில் பெற்ற வருமானம் எவருக்குமே கிடைத்ததில்லை. எழுத்திலேயே அவர் குபேரராஞர்.

டெலிவிஷன் — திரைப்படங்கள் ஆகியவற்றிலும் மோம் பிரபலமாக இடம் பெற்றிருந்தார்.

சோமர்ஸட் மோமைப் போன்ற விதவிதமான திறன்கள் பெற்றவர்கள் உலகத்தில் அபூர்வம். நவீனம், சிறுகதை, நாடகம் கட்டுரை, விமர்சனம் ஆகிய துறைகளில் மட்டுமன்றி, சிறந்த கல்விமாஞகவும் அவர் புகழ்பெற்றிருந்தார்.

41 வயதில் திரு. மோம் எழுதிய ''ஆப்ஹியூமன் பொண்டேஜ்'' என்ற நூல் இந்த நூற்ருண்டின் மிகச் சிறந்த நவீனம் என மதிக்கப்படுகிறது.

## பெண் குழந்தை மரணம்: இளம் பெற்ருேர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

அல்லைப்பிட்டியில் உயிருடன் பிறந்த அழகான பெண்குழந்தையின் மரணம் சம்பந்தமாக இளம் பெற்ருேர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

குழந்தையின் மரணம் சம்பந்தமாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் சி. என். தியாகராசா, அல்லைப்பிட்டிகிராம சேவகர் திரு. வி. கே. தளையசிங்கம் பொலிஸ் கோஷ்டியுடன் சென்று விசாரணை செய்து, சந்தேகத்தின்பேரில் குழந்தையின் தந்தையான சதாசிவம் (வயது 23) தாயாரான அன்னலட்சுமி (வயது 18 ஆகிய இருவரையும் கைதுசெய்தனர்.

நேற்றுக் காலை ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. ரி ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் சந்தேக நபர்களான குழந்தையின் பெற்ருேரை பொலிஸார் ஆஜர் செய்தனர். சந்தேகநபர்களை இம்மாதம் 23 ம் தேதி வரை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

அரசாங்கசேவை

## ஊழியருக்கு சலுகை

பம்பலப்பிட்டி, வியா.

சிங்களத்தில் தேர்ச்சி பெருத அரசாங்க சேவை பழைய ஊழியர்கள் (1956-ம் வருடத்துக்குமுன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) அரசாங்க சேவைப் பரீட்சைகளுக்குத் தோற்ற தற்போது அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

சிங்களத் தேர்ச்சி விதியால் பழைய ஊழியர்களின் பதவி உயர்வுகள் தடைப்படக் கூடாது என்ற திறைசேரியின் முடிவுக் கிணங்கவே இவர்களுக்கு இவ்வித சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## விண்வெளியில் சந்திக்கும் 'ஜெமினி' கப்பல்கள்

ஹவுஸ்டன், டிசம்பர். 15

அமெரிக்காவின் 'ஜெமினி-6' விண்வெளிக் கப்பல் இன்று வானவெளிக்கு வெற்றிகரமாக அனுப்பி வைக்கப்பட்டது.

தற்பொழுது பூமியை பதினெரு நாட்களாக வலம்வரும் 'ஜெமினி-7' விண்வெளிக் கப்பலை 'ஜெமினி-7' விண்வெளிக்கப்பல் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை இரண்டுமணிக்கு சந்திக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இரு விண் கப்பல்களும் திருப்திகரமாக இயங்கிவருகின்றன.

## சாஸ்திரி-அயூப். சந்திப்புக்கு ரஷ்யா ஆயத்தம்

மாஸ்கோ, டிச. 16

டாஷ்கண்டில் சாஸ்திரி-அயூப் சந்திப்புக்குச் சகல ஆயத்தங்களையும் சோவியத் ரஷ்யா மேற்கொண்டு வருகிறது. அடுத்த 4-ம் திகதி இச்சந்திப்பு நடைபெறும்.

சோவியத்தின் அழைப்பை இருநாடுகளும் ஏற்றது ரஷ்யாவுக்கு ஒரு வெற்றி என மாஸ்கோ அறிவிப்பு கூறியது.

''ஆனுல் எல்லாப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு மந்திரம் எதுவும் இல்லை. எனினும் பாகிஸ்தான் தலைவர்களிடம் தனது செல்வாக்கை உபயோகிக்க ரஷ்யாவுக்கு இதன்மூலம் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது'' என ரஷ்ய அறிவிப்பு கூறியது.

காஷ்மீர் பிரதமர் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனப் பாகிஸ்தான் கோரினுல் சில நிமிடங்கள்கூட டாஷ்கண்ட் மகாநாடு நீடிக்காது என்ருர்.

இதற்கிடையில் டாஷ்கண்ட் மகாநாடு வெற்றியடையும் என நம்பவதாக அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிருர்.

## இ. போ. ச. ஊழியருக்கு போனஸ

பம்பலப்பிட்டி, வியா.

சகல இ. போ. ச. ஊழியர்களுக்கும் ரூ. 175 போனஸாக வழங்கப்படவிருக்கிறது. 1965-ம் வருடத்துக்கான ஊக்கமளிக்கும் போனஸாக 25 ரூபா டிசம்பர் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட விருக்கிறது.

டூனிஸியா

## சீனுவுக்கு எச்சரிக்கை

கார்ட்டூம், டிச. 16

டூனிஸியாவில் ஆக்ரமிப்பு வேலையில் ஈடுபடுதல், டூனிஸியத் தலைவர்களைத் தூற்றுதல் ஆகியவற்றை நிறுத்தாவிட்டால் சீனுவுடன் ராஜதந்திரத் தொடர்பை துண்டிக்கப் போவதாக டூனிஸிய வெளிநாட்டு மந்திரி எச்சரித்திருக்கிருர்.

சீனு தென்கிழக்காசியாவில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருப்பதாயும், ஏகாதிபத்திய நோக்கத்துடன் செயல்படுவதாயும் அவர் குற்றஞ்சாட்டினுர்.

## இராமேஸ்வரம் மன்னுர் படகு சேவை

புதுடில்லி, டிச. 16

இரமேஸ்வரத்துக் கருகே ஒரு இடத்திலிருந்து தலைமன்னுருக்கு படகுசேவை நடத்துவது குறித்து பாரத கப்பல் கார்ப்பரேஷன் யோசித்து வருகிறது. நேற்று கார்ப்பரேஷன் பிரதிநிதிகளும், ரயில்வே போர்ட், தென் பிராந்திய ரயில்வே பிரதிநிதிகள் ஆகியோரும் இதுகுறித்து ஆலோசனை நடத்திஞர்கள். தனுஷ்கோடி -தலைமன்னர் கடற் போக்குவரத்து துண்டிக்கப் பட்டிருப்பது காரணமாக இப்புதிய ஏற்பாடு.

## நேட்டோவில் சீனு?

பாரிஸ், டிச. 16

ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளை மிரட்டி ஆதிக்கத்துக்குக் கொண்டுவரும் சீனுவின் முயற்சி பற்றி நேட்டோ ஆராயவேண்டும் என அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கோரினுர்.

இன்னும் 2 ஆண்டுகளில் அணுக்குண்டுகளையும், அஸ்திரங்களையும் சீனு தயாரிப்பது பற்றியும், சீன ராணுவபலம் பற்றியும் அராய அவர் கோரினுர்.

ஐரோப்பாவிலுள்ள நேட்டோ படைகள் தூரகிழக்குக்கு நகர்த்தப்படமாட்டாது என்றும் அவர் கூறினுர்.

## சைகோனுக்கருகே சண்டை

சைகோன், டிச. 16

வடவியட்னுமில் ஹானேய் புறநகர் தொழிற்சாலைப் பகுதியை அமெரிக்க விமானங்ள் தாக்கியதாயும், அங்கு அணுமின் சாரநிலையத்தில் பாதி அழிந்து விட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்று, அதற்கு முதல் நாளும் 5 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

சைகோனுக் கருகே வியட்காங்கியர் கடும் சண்டையில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எல்லாப் பொறுப்புகளையும் விட்டொழித்து இங்கு என்றனையே நல்லாய் சரண்புகுக, நானுன்னை அல்லல் தரு பாவங்களின் முற்றும் பற்றறவே விடுவிப்பேன் மேவு துயர் எல்லாம் விடு.

—கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 2 உ (17-12-65)

## பரீட்சைகளும் பரீட்சை அதிகாரிகளும்

இப்பொழுது நடைபெறும் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குரிய சில பாடங்களுக்கான வினாத்தாள்கள் சில பரீட்சைக்குமுன்பாகவே வெளியாகிவிட்டதாகப் புகார் வெளிவந்துள்ளது. ஆங்கில பாடப் பரீட்சைக்குரிய வினாத்தாளில் சில வினாக்கள் முன்பாகவே வெளியாகிவிட்டதென்பதை பரீட்சை இலாகாவும் ஒப்புக்கொண்டுள்ளது. பரீட்சை வினாத்தாள்கள்சில, பரீட்சைக்கு முன்னரே வெளியாகிவிடுவதுபற்றிய குற்றச்சாட்டுக்கள் இங்கு சுமத்தப்படுவது இது முதல்தடவையல்ல. இத்தவறுகள் இனியும் ஏற்படாமல் தடுப்பதற்கு வழி என்ன?

இங்கிலாந்திலும் மற்றும் காமன் வல்த் நாடுகளிலும் பாடசாலைப் படிப்பு முடிந்து வெளியேறுவதற்கான பரீட்சைகளும் பல்கலைக்கழகப் பரீட்சைகளும் பல்கலைக் கழகங்களினால் அல்லது பல்கலைக்கழகக் குழுக்களினால் அமைக்கப்பட்ட பரீட்சை மேற்பார்வைக் குழுவினால் நடத்தப்படுகின்றன. இந்தியாவில், பாடசாலைப் படிப்பு முடிந்து வெளியாகும் பரீட்சைகள், பல்கலைக்கழகப் பரீட்சைகள் ஆகியவைகளுக்கு பல்கலைக்கழகங்களே பொறுப்பாக இருக்கின்றன. இலங்கையில் கேம்பிரிட்ஜ், லண்டன் மெட்ரிகுலேஷன்பரீட்சைகளின்தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பின்னர் இங்கு பரீட்சைகள் கல்வி இலாகாவின் ஒரு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் பிரிவு பரீட்சைப் பகுதி என அழைக்கப்படுகிறது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பரீட்சைக் கமிஷனரின் கீழ் இயங்கும் இந்தப் பரீட்சை இலாகா, வினாத்தாள்கள் தயாரிப்பது, பரீட்சைகளை நடத்துவது, விடைத்தாள்களைத் திருத்துவது முதலிய அலுவல்களைச் செய்கிறது. சமீப காலத்தில் பரீட்சைகளுக்கு குறிப்பாக ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு லட்சத்துக்குமதிகமானபரீட்சார்த்திகள் தோற்றத் தொடங்கியதைத் தொடர்ந்து, பரீட்சை இலாகா மீது பெருமளவில் குற்றம் குறைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. நவீன கல்வி முறையில், பரீட்சைகள் பெருந்தொழில்நுட்பம்நிறைந்த தனித்துறைக்குரிய விஷயமாகும். புதுயுகக்கல்விமான்களினதும் மனோதத்துவ ஆராய்ச்சியாளரினதும் உதவியுடன் கல்வித்துறை நிபுணர்கள், பரீட்சைகளைத் தரம் வாய்ந்த முறையில் நடத்துவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில், பரீட்சைகள் நடத்தும் முறையில் அது வெகுவாகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பரீட்சைகளில் பரீட்சை அதிகாரிகளாக நியமிக்கப்படுபவர் பலர் பாடசாலைக் கல்வியுடன் தொடர்பே இல்லாதவர்கள். பரீட்சைகள், பரீட்சை முறைகள் பற்றி அறிந்துகொள்வதற்கு நூல்நிலைய வசதிகள் கூட அவர்களுக்குக் கிடையாது. இதன் விளைவுதான் எமது பரீட்சை வினாத்தாள்கள் பலவும் பாரம்பரிய முறையிலிருப்பதுவும் நவீன முறையில் தரமானதாக இல்லாதிருப்பதுவுமாகும். விடைத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப்படும் பெருந் தொகையானவர்களில் பெரும்பாலானவர்கள் பிரதம பரீட்சை அதிகாரிக்குத் தெரிந்தே இருக்கமாட்டார்கள். இதுதவிர பரீட்சை இலாகாவின் வேலைப் பளுவும் தவறுகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. வினாத்தாள், பரீட்சைக்கு முன்னரே வெளியாவது பரீட்சை இலாகாவின் நோய்க்கு அறிகுறியாகும். இவையாவும் மாணவர்களையே பாதிக்கின்றன.

எங்கேயாவது ஒரு மாகாணத்தில் வினாத்தாள்களில் ஒருநெறி தவறும்பரீட்சாதிகாரிதவறாக நடந்துகொண்டால் அச்சந்தர்ப்பத்தைப் பத்திரிகைகள் பயன்படுத்தி, பத்திரிகைச் சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்து ஒரு மூலையில் நடைபெற்ற மோசடியை நாடு முழுவதற்கும் பரப்பிவிடுகின்றன. இந்த வருடமும் சில வினாத்தாள்கள் வெளியாகியுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால், இதில் சிறிதளவும்கூட சம்பந்தப்படாத மாணவர்கள், பரீட்சார்த்திகளே தண்டனைக்குள்ளாகிறார்கள். ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கண்விழித்துப் படித்து தளர்ச்சியடைந்திருக்கும் சமயத்தில் மீண்டும் கண்விழித்துப் படித்துப் பரீட்சை எழுதவேண்டுமென்ற நிலை ஏற்பட்டதும் தளர்ச்சியடைந்து விரக்தியடைகின்றனர். சில மாணவர்கள் மனம்சோர்ந்து தற்கொலை முயற்சியிலீடுபடுவதும் விந்தையல்ல.

நெருக்கடியைத் தணித்து மன அமைதியை ஏற்படுத்துவது கல்வியின் ஒரு நோக்கமாகும். இங்கு கல்வியும் பரீட்சை முறையும் மனச்சோர்வையும் விரக்தியையும் பாடசாலைப் படிப்பை முடித்து வெளியேறும் சமயத்தில் ஏற்படுத்தக் கூடியதாக இருப்பின் இங்கு அவ்வித கல்வி முறையைக் கண்டிப்பது மட்டுமல்ல, ஒழித்துக் கட்டவும்வேண்டும். மனிதத்தன்மையும் நடைமுறைக்கேற்றதாகவும் பரீட்சைகளை நவீனமுறையில் நடத்த வழிவகைகளைக் காணவேண்டுமென அரசாங்கம் பல தடவைகளில் கோரிவந்துள்ளது. இதற்குக் கல்விமான்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நவீன முறையான [illegible] திட்டத்தில் பயிற்சியளிக்கப்படவேண்டும். பரீட்சையில் தனித்துவம் வாய்ந்த பணி செய்ய விரும்புபவர்கள், தலைக்கனம் பிடித்த பல்கலைக் கழகப் பேராசிரியர்களாயினும் சரி, பரீட்சை இலாகா அதிகாரிகளாயினும் சரி அவர்களும் அவசியமான பயிற்சி பெறுவதற்குக் கட்டாயப்படுத்தப்படவேண்டும். நூல் நிலையம், மாதிரி வினாத்தாள், நவீன யந்திர சாதனம் முதலிய வசதி முதலியவைகள் விசேஷ பயிற்சி பெறுவதற்கு அளிக்கப்படவேண்டும்.

பரீட்சை இலாகா அதிகாரிகள், பல்கலைக்கழக அதிகாரிகள், மற்றும் கல்விமான்கள், கல்விக் கழகப் பிரதிநிதிகள் ஆகியோர்களைக் கொண்ட பரீட்சைச்சபை அல்லது [illegible] கள் நடத்தப்படுவதே சிறந்தது.

## "தமிழ்மொழியின் சீர்திருத்தவாதி ஆறுமுக நாவலர்"

### லெஸ்லி குணவர்த்தன அஞ்சலி

வெள்ளவத்தை, வியா.

"இரண்டாயிரம் ஆண்டிற்கும் மிகப் பழமையான திராவிடன் கலாச்சாரம் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும். அப்பொழுதும் சிறப்பாக நாவலர் விழாவைக் கொழும்பில் கொண்டாடவேண்டும்" என்று உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திரு. மு. திருச்செல்வம் அரசாங்க ஊழியரின் நாவலர் விழாவின் போது குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையார் திரு. ச. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற விழாவின் போது தேசாதிபதி வில்லியம் கோபல்லாவ ஒரு சிறுமியால் மலர் மாலை சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டபின் தலைவர் தேசாதிபதிக்கு சந்தனப் பொட்டு இட்டு மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

திரு. வே. ச. சுபபையாவின் தேவாரத்தைத் தொடர்ந்து தேசாதிபதி குத்துவிளக்கினை ஏற்றி விழாவைத் திறந்து வைத்தார். செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம் குழுவினரால் இலங்கைத் தேசிய கீதமும், நாவலர் அஞ்சலியும், தமிழ் வணக்கமும் பாடப்பட்டது.

இதைத் தொடர்ந்து உள்ளூராட்சி அமைச்சர் நாவலரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

திரு. சி. சிவப்பிரகாசம் தனது வரவேற்புரையில், "உலகத்திற்கு நாவலரின் பெருமையை உணர்த்தவே இந்த விழா எடுக்கப்படுகிறது' என்றுகுறிப்பிட்டார்.

மகாதேசாதிபதி தலைவரின் உரையைத் தொடர்ந்து பேசுகையில், "நாவலரின் பணி அவர்கால பல சமூகத்தவராலும் பாராட்டப்பட்டுள்ளது. ஐம்பத்தேழு வயதில் அவர் இறந்தாலும் 23 வயதிலேயே பொதுப் பணியில் ஈடுபட்டு வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார். தென் இந்தியாவிலும் புகழ் பெறும்படியாக வாழ்ந்த நாவலரைப்பெற்ற நாம் பெரும் பாக்கியசாலிகளாவோம். நாவலரின் தமிழ்மொழி ஆற்றலை தென்னிந்தியாவிலும் பார்க்க அவர் சிறப்பாக மொழிபெயர்த்த பைபிளின் மூலம் அறியலாம்" என்று குறிப்பிட்டார்.

### அறிவை பொதுச் சொத்தாக்கினார்

அமைச்சர் திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில், "நாடு ஐக்கியமடைந்துள்ளது என்பதை இந்த விழா எடுத்துக் காட்டும். தமிழர் தம் பரம்பரை கலாச்சாரம் அழியும் நிலையில் இருந்தபோது சிறப்புமிக்க கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் தமிழர் என்பதை நாவலர் உலகுக்கு உணர்த்தினார். 19-ம் நூற்றாண்டில் தலைசிறந்த பெரியார் நாவலர். மொழி மனிதனின் எண்ணத்தை வெளிப்படுத்தும் முக்கிய கருவிஎன்பதை உணர்ந்து அதன்படி அதை உரைநடையில் உபயோகித்து வெற்றி கண்டவர் நாவலர். அறிவு சிலருக்கு கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அதைப் பொதுச் சொத்தாக்கியவர் நாவலர்" என்று குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில், "நாவலர் சாதாரண மனிதரல்ல, தனது காலத்துச் சீரழிவை நீக்கிய மக்களுட் சிறந்தவரே நாவலர். போர்த்துக் கேயரால் அழிக்கப்பட்ட ஆலயத்தை அவர் புதுப்பிக்க முனைந்து சைவத்திற்குத் தொண்டாற்றினார்" என்று குறிப்பிட்டார்.

### நாம் செய்யும் பணி என்ன?

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், "திராவிடத் தமிழ் கலாச்சாரமும், ஆரிய சிங்கள கலாச்சாரமும் முரண்படா வகையில் ஒற்றுமையாக வளரக் கூடியன என்பதையே தேசாதிபதி போன்ற இன்னும் பல சிங்கள அன்பர்கள் கூடியுள்ள இவ்விழா எடுத்துக் காட்டுகின்றது. நாட்டின் சுயமரியாதையை உணர்ந்து பணியாற்றிய நாவலரின் துணிச்சலுக்கு அவர் எழுதிய நூல்களே சான்று தரும். தமிழுக்கும் சைவத்திற்கும் பணி செய்தலே நாவலருக்கு நாம் செய்யக் கூடிய பணியாகும்" என்று குறிப்பிட்டார்.

### தமிழ்மொழியின் சீர்திருத்தவாதி

திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில், "தமிழ் மொழியை உணராதபிறமக்கள் நாவலரை உணராதது பெரும் குறைபாடாகும். இக்குறையை ஓரளவு திரு. முத்துக்குமாரசாமி தனது நூல் மூலம் போக்கியுள்ளார். தமிழ்மொழியின் சீர்திருத்த வாதியே நாவலர். அவர் சிறந்த ஆத்மீகவாதி. மனோவல்லமையும் உடையவர். அவர் வாழ்ந்த பகுதியாகிய யாழ்ப்பாணத்தவர் பேசும் தமிழ் இந்தியத்தமிழிலும் பார்க்கச் சிறப்புடையது. என்பதை நான் யுத்த காலத்தில் இந்தியாவில் இருக்கும்போது உணர்ந்தேன்" என்று கூறினார்.

மலைநாட்டவரின் சார்பில் திரு. தொண்டமான் பேசுகையில், 'நாவலர் எவ்வாறு தமிழ்மொழியை நல்லூரில் மட்டுமன்றி சிதம்பரத்திலும் பாதுகாத்தாரோ அதேபோல், நாம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை எங்கிலும்தமிழ்மொழியைப் பாதுகாப்பதன் மூலம் நாவலருக்குப் பணிசெய்ய முடியும்' என்று குறிப்பிட்டார்.

### நாவலரின் வழியில் பொருளாதார வளர்ச்சி

திரு. எஸ். ஏ. விக்கிரசிங்கா பேசுகையில், 'உண்மையான தேசிய ஒற்றுமை சமூக ஐக்கியம் உருவானால்தான் நாம் நாவலருக்குப் பணிசெய்தவர்களாவோம். கலாச்சாரத்தைப் பாதுகாக்க மட்டும் நாம் போராடாது நமது பொருளாதாரத்தை வளப்படுத்தவும் நாவலரின் வழியே போராடவேண்டும்' என்று கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுகிறார்

மதுரை ஆதீனத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "தினமணி" பத்திரிகையில், "அமெரிக்கர் ஹிந்துவாகிறார்" என்றதலைப்புடன்வெளியான ஒரு செய்தியை அனுப்பி, அதை வெளியிடுமாறு ஆதீன நிர்வாக அதிகாரி கேட்டிருக்கிறார்.

ஹிந்துவாகமாறிய அமெரிக்கரின் படத்தையும் அத்துடன் அனுப்பியிருக்கின்றார்கள். அச்செய்தி வருமாறு:-

"மதுரை டிச. 9— இதுவரை இதர மதங்களைச் சேர்ந்த 2649 பேர்கள் ஹிந்துவாகவிரும்பி, மதுரை ஆதீனம் ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடம் முறைப்படி தீட்சைபெற்று ஹிந்து பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.

"சமீபத்தில் ரெக்ஸால் என்ற அமெரிக்கர் ஒருவர் ஹிந்துவாக விரும்பி சுவாமிகளிடம் அணுகி ஆசி பெற்றார். இங்கு ஹிந்துவாக மாறும் 2வது வெள்ளைக்காரர் இவர். ஏற்கெனவே ஐரோப்பியரான பிரதர் லூஸியன் பீட்டர் ஜார்டின் என்பவர் 13-2-61-ல் முறைப்படி தீட்சைபெற்று ஹிந்துவாக மாறி தட்சிணாமூர்த்தி என்ற பெயர் சூட்டப்பெற்றார் அவர் சிவபூசையும் எடுத்துக்கொண்டு முறைப்படி பூஜைசெய்து வருகின்றார். தற்போது அவர் ஆபிரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த ரெக்ஸால் 44 வயதானவர். கல்யாணமாகாதவர். சைவர். அவருக்கு சிவகுமார் என்ற பெயர் சூட்டப்படவிருக்கிறது.

தாம் ஹிந்துவாக மாறுவதற்கான காரணங்களை அவர் ஸ்ரீ சுவாமிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் விளக்கியுள்ளார்.

'ஹிந்து மதம் 4 முக்கிய அம்சங்களுடைய மதமாகும். ஆகவே அது பூரண சதுரத்தைப் போன்றது. மற்ற மதங்கள் இந்த சதுரத்தில் அமைந்துள்ள முக்கோணங்களாகும். பூரணத்துவம் நிறைந்த ஒரே மதம் ஹிந்து மதம் என்று நான் கருதுகிறேன். ஆகவே நான் ஹிந்துவாக விரும்புகிறேன்' என்று கூறியுள்ளார்.

காரைக்குடி அழகப்பர் கல்லூரி எம். ஏ. மாணவரான ஸ்ரீ சீமைச்சாமி என்பவரும் இதேபோல் ஹிந்துவாக தீட்சை பெற்றுள்ளார்."

ஃ ஃ ஃ

இந்துக்களையெல்லாம் வேறு மதங்களுக்கு மாற்றிவிட பலஸ்தாபனங்களுண்டு. ஆனால் ஏற்கெனவே இந்துவாயிருந்து சில பல காரணங்களால் வேறு மதங்களுக்கு மாறியவர்கள் மீண்டும் இந்துவாக விரும்பினால், அவர்களை தீட்சை அளித்து ஏற்க ஒரு ஸ்தாபனமும் கிடையாது. மத மாற்றமென்பது இந்து சமயத்திலிருந்து வெளியேறுவதற்கான ஒரு வழிப்பாதையாகவே இருந்துள்ளது.

நாடு அடிமைப்பட்டிருக்கையில் நாவலர் பெருமான் இந்த ஆபத்தை உணர்ந்து பெரிதும் போராடினார். சுவாமி விவேகானந்தர், சில அமெரிக்கர்களை இந்துக்களாக்கினார். சகோதரி நிவேதிதா தேவியும் அதில் ஒருவர்.

சைவசமய குரவர்களில் ஒருவரான ஸ்ரீ திருஞான சம்பந்தசுவாமிகள், சமணனான பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தும் சைவ

(5-பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவெளி அற்புதம்

# இரு அமெரிக்க விண்வெளிக் கப்பல்களும் வான்வெளியில் சந்தித்தன!

## 10 அடி இடைவெளியில் பலமணி நேரம் ஒன்ருகப் பிரயாணம்

### மனிதனை சந்திரனில் இறக்கும் முயற்சியில் துரிதபாய்ச்சல் என பாராட்டு

கேப்கென்னடி, டிச.16

**சரித்திரத்தில் முதல் தடவையாக நேற்றிரவு ஜெமினி-7, ஜெமினி-6 என்ற இரு அமெரிக்க கிரகங்களும் வானவெளியில் சந்தித்துக் கொண்டன. இரண்டும் ஒன்றுக்கொன்று 10 அடி இடைவெளியில் பலமணிநேரம் ஒன்ருகப் பிரயாணம் செய்தன. அப்போது 4 வானவெளிப் பிரயாணிகளும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டனர்.**

ஜெமினி7ல் ஜேம்ஸ்லவல், கிரேங்க் போர்மன் ஆகிய இருவரும், ஜெமினி 6ல் டொம்ஸ்டாப்பர்ட், வெலி ஷீரா ஆகிய இருவரும் பிரயாணம் செய்கின்றனர்.

ஜெமினி 7, கடந்த 11 நாட்களாக வானவெளியில் சுற்றி வருகிறது. இரு கிரகங்களும் மணிக்கு 17,000 மைல் வேகத்தில் சுற்றுகின்றன.

புதிதாக அனுப்பப்பட்ட ஜெமினி 6, குறிப்பிட்ட சில சுற்றுக்களுக்குப்பின் பூமிக்குத் திரும்பும். ஆனல் ஜெமினி 7 திட்டமிட்டபடி 2 வாரங்கள் அதாவது சனிக்கிழமைவரை வான வெளியில் சஞ்சரிக்கும்.

ஜெமினி 6 இன்று தென் ஆபிரிக்காவுக்கு மேலே செல்லும். நேற்று அனுப்பப்பட்ட இந்த விண்வெளிக் கப்பல், அதுஅனுப்பப்பட்ட 5 மணி 45 நிமிஷத்தில் ஹாவாயிலிருந்து 300கிலோ மீட்டர் தூரத்தில், தனது மூத்த கப்பலைச் சந்தித்தது.

வானவெளி சாதனையில் இது புதிய ஒரு மகத்துவம் பொருந்தியதென்றும், அடுத்த ஆண்டு இரு கப்பல்கள் வானவெளியில் ஒன்ருக இணைக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

ஒன்றையொன்று சந்திக்கும்பொருட்டு துல்லியமான முறையிலும், சரியான முறையிலும் கணக்கெடுப்பைவிஞ்ஞானிகள் வெற்றிகரமாக நடத்தியிருப்பதாய்ப் பாராட்டப்பட்டார்கள்.

மனிதன் சந்திரனில்இறங்கும் முயற்சியில் இது துரிதமான ஒரு பாய்ச்சல் என வர்ணிக்கப்பட்டது.

ஜனதிபதி ஜோன்ஸன்விடுத்துள்ள பாராட்டுச் செய்தியில் இது அமெரிக்காவுக்கு மட்டுமன்றி, மனித குலத்திற்கே பெருமையளிக்கும் சாதனையெனக் குறிப்பிட்டார்.

## வான்வெளி சாதகர்கள்



ஜெமினி 7-ல் பிரயாணம் செய்யும் லவல், போர்மன் ஆகியோர் மேலே காணப்படுகிருர்கள். கீழே உள்ள படத்தில் ஜெமினி 6-ல் பிரயாணம் செய்யும் ஸ்டப்பர்ட், ஷீரா ஆகியோர் இருக்கிருர்கள்.

## கிழக்கு பாகிஸ்தான் புயலில் 2000 பேர் பலி!

டாக்கா, டிச. 15

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள சிட்டகாங் பகுதியில் கடும் புயலும், கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டிருப்பதாயும், சிட்டகாங்குக்கும் நாட்டின் இதரபகுதிகளுக்குமிடையேதொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. பேரழிவு ஏற்பட்டிருப்பதாயும், சுமார் 2000 பேர் மாண்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாடு

### பிரதமர் துங்கு துவக்கி வைப்பார்

சென்னை, டிச.16

வருகிற ஏப்ரல் 19ம்திகதி முதல் 23-ம் திகதி வரை கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் முதலாவது சர்வதேச தமிழாராய்ச்சி கருத்தரங்கை பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் ஆரம்பித்துவைப்பார்என மகாநாட்டின் பிராந்தியக்கமிட்டிக் காரியதரிசி திரு. ஏ. சுப்பையா கூறினர்.

மலேஸிய அரசாங்கத்தின் ஆதரவில் மலாயாபல்கலைக் கழகமும், தேசியக் கல்வி (இந்தியக்கல்வி)அபிவிருத்தி சபையும் இந்த மகாநாட்டை நடத்துகின்றன.

சுமார் 50 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கோலாலம்பூருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும், பிரயாணச்செலவுஉட்பட அவர்களுக்கு முழு வசதிக்கான செலவில் பாதியை, அதாவது ரூபா 30,000ஐ ஸ்தாபக கமிட்டி அளிக்கும் என்றும் திரு. சுப்பையா கூறினர்.

மற்றப்பாதிச்செலவு இந்திய அரசாங்கத்திடமிருந்தும், பொதுமக்களின் நன்கொடையிலிருந்தும் திரட்டப்படுமென அவர் தெரிவித்தார்.

உத்தேச மகாநாட்டை இந்தியாவில் நடத்தவேண்டுமென்றுதான் முதலில் தீர்மானிக்கப்பட்டதாயும், அவசர நிலை காரணமாக மகாநாடு மலேஸியாவுக்கு மாற்றப்பட்டதென்றும் அவர் கூறினர்.

1964-ம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற கீழைத் தேயமொழிவல்லுனர்களின் 26-வது சர்வதேச மகாநாட்டில்தான், சர்வதேச தமிழாராய்ச்சி சங்கம் இந்த மகாநாட்டை நடத்தவேண்டுமெனத் தீர்மானித்தது.

பேராசிரியர் பில்லியோஸாட்(ஒக்ஸ்போர்ட்) இச்சங்கத்திற்குத் தலைவர். பேராசிரியர் பரோ (ஒக்ஸ்போர்ட்) பேராசிரியர் கியூப்பர் (லண்டன்) ஆகியோர் சங்கத்தின் உபதலைவர்கள்.

மகாநாட்டுக்கு ஒழுங்கு செய்யும் கமிட்டியை மலேஸியா நிறுவியது. மந்திரி டட்டோ வி. டி. சம்பந்தன் இதற்குத் தலைவர். மந்திரி மாணிக்கவாசகத்தைக் கொண்டு நிதிக்கமிட்டி அமைக்கப்பட்டது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சுவீடின். டென்மாக். ஹாலந்து' ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு, செக்கோஸ்லோவேகியா, போர்த்துக்கல், ஹாங்காங்: ஜப்பான், இலங்கை ஆகிய நாடுகளும் மகாநாட்டிற்குபிரதிநிதிகளை அனுப்ப இணங்கியிருக்கின்றன.

(பி.டி.ஐ.)

## 800 காவல் பிரஜைகள் வருவர்

புதுடில்லி, டிச. 16

பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டிருந்த 800 பாரத பிரஜைகள், இம்மாதம் 21-ந் திகதி கப்பல் மூலம் தாயகம் திரும்புவார்களென்றும், இவர்களில் பாதிப்பேர் பெண்களும் குழந்தைகளும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

லண்டன், டிச. 16

பிரிட்டனுடனுள்ள ராஜியா உறவை தன்ஸானியா முறித்துக்கொண்டு விட்டது. ரொடீஷியா விஷயமாக பிரிட்டனுடன் உறவை முறித்த இரண்டாவது நாடு தன்ஸானியா ஆகும்.

# இந்தோ - பாகிஸ்தான் தகராறு: அமைதிமுறையில் தீர்க்கவேண்டும்

### அயூப்-ஜோன்ஸன் கூட்டறிக்கை

வாஷிங்டன், டிச. 16

அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனும், பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும் இங்கு விடுத்துள்ள கூட்டறிக்கையில் இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே தீராமலிருக்கும் எல்லா வேற்றுமைகளையும் அமைதி முறையில் தீர்க்கவேண்டுமென ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

இரு நாடுகளும் தங்கள் சக்தியை வீணுகவிரயம் செய்யாமல், ஆக்கபூர்வமான சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு அதைப் பிரயோகிக்கவேண்டும் என்றும் அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

இந்தோ - பாகிஸ்தான் சண்டை நிறுத்தம்பற்றி ஐ. நா. பாதுகாப்புசபை நிறைவேற்றிய தீர்மானங்களை இரு தலைவர்களும் ஆதரித்திருக்கிருர்கள்.

பாகிஸ்தானின் சுதந்திரத்தையும், ஆதிபத்திய உரிமையையும் அமெரிக்கா மதிக்கிறது என ஜனதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிருர். அமெரிக்காவுடன் நட்புடனிருப்பதற்கு பாகிஸ்தான் பெருமுக்கியத்துவம் அளிக்கிறது என அயூப்கான் கூறியிருக்கிருர்.

தென்கிழக்காசியாவில் குழப்பமற்ற அமைதியை இருதலைவர்களும் வலியுறுத்தியிருக்கிருர்கள்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையிலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கையில் எதிர்வரும் டாஷ்கண்ட் பேச்சு வெற்றியடையுமென ஜனதிபதி ஜோன்ஸன் நம்பிக்கைகொண்டிருப்பதாய்க் கூறப்பட்டது. இந்தியப் பிரதமர் சாஸ்திரியை சந்திக்கும் வாய்ப்பை அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாயும் வெள்ளைமாளிகை அறிவிப்பு கூறியது.

ஜோன்ஸன்-அயூப் பேச்சில்பாகிஸ்தானுக்குராணுவ பொருளாதார உதவியை அமெரிக்கா மீண்டும் ஆரம்பிக்கும் அறிகுறி எதுவும் தென்படவில்லை என பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

## கி. பாகிஸ்தானில் பொலிஸ் தீவிரம்

டாக்கா, டிச. 16

கிழக்குப் பாகிஸ்தானில், பெருகிவரும் புரட்சிச்சபையின் நடவடிக்கையைத் தடைசெய்யும் பொருட்டுப் பொலிசார் வீடு வீடாகச் சோதனையிட்டுவருவதாயும், அஸாமிலீக்கைச் சேர்ந்த பெருந்தொகையானேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் விசாரணைக்காகப் பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

புரட்சி ரேடியோவைக் கேட்டதற்காக சில்ஹெட்டில் 500 ரேடியோ செட்டுகளை பொலிசார் பறிமுதல் செய்திருக்கிருர்கள்.

புரட்சி சபையின் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றைத் தேடி 20 வீடுகள் சோதனையிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பொதுஊழியர் மந்திரி திருச்செல்வத்துக்கு மகஜர்

திருக்கோணமலை, வியாழன்

தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தினர் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கு சிங்கள மொழிக் கொள்கையால் தங்கள் சங்க உறுப்பினர்கள்படும் கஷ்டம் பற்றியும் அதற்கு நிவாரணம் வழங்கும்படியும் கோரி ஒரு மகஜரை சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆங்கிலேயர் ஆட்சியின் போது ஆங்கிலம் நிர்வாக மொழியாகவிருந்தும் கூட ஒரு சில்லறை ஊழியராகுதல் பாதிக்கப்படவில்லை. ஆனால் தற்பொழுது எங்கள் அங்கத்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுச் சேவையிலுள்ள சில்லறை ஊழியர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும்போது முழுமையான கல்வி பெருமலே செல்கின்றனர். இந்நிலையில் சிங்களத்தில் ஒரு குறிக்கப்பட்ட எல்லைக்குள் தேர்ச்சியடைய வேண்டுமென்று கேட்பது நியாயமற்றதாகும்.

ஒரு சில்லறை ஊழியர் தனது வருட சம்பள உயர்விற்கும் பதவி உயர்வுகளுக்கும் 1656ம் ஆண்டிற்கு முன்னர் உரியவராயிருந்தார். ஆனால் செப்டம்பர் 1956ம் ஆண்டிற்கும் ஜனவரி 1964ம் ஆண்டிற்கும் இடையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு சில்லறை ஊழியர்கள் பதவி உயர்வுகள் யாவும் தடைபட்டுள்ளன.

இக்காரணங்களுக்காக எங்கள் சார்பில் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துவைக்கும்படி கோருகின்றோம்.

தேசிய ஒற்றுமைக்கு வழிவகுத்த அரசாங்கம் இப்பிரச்னையையும் சிறந்த முறையில் நோக்கவேண்டுமென பெரிதும் விரும்புகின்றோம்.

REGAL—JAFFNA
NOW SHOWING

Cecil Parker
Agnes Laurent
IN
A FRENCH
MISTRESS

ராஜா
(யாழ்ப்பாணம்)
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை

## கூப்பன் புத்தகங்களை அரசாங்கம் வாங்கும்?

பம்பலப்பிட்டி, வியா.

பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வைத்திருப்பவர்கள் அதனை அரசாங்கத்துக்கு விற்றுவிட முன்வந்தால் அவற்றை வாங்குவதற்கு அரசாங்கம்தயாராகக்கூடிய வழிவகைகள் பற்றி தற்போது உணவு அமைச்சு ஆலோசனை செய்துவருகிறது.

இதற்கான ஒரு திட்டத்தை உணவு விவசாய அமைச்சு தயாரித்துள்ளது. அன்னிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்காகவே இவ்வித திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

9-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை

கொழும்பில்

## தமிழ் மாணவிகளுக்கு தனிப் பாடசாலை

பம்பலப்பிட்டி, வியா.

கொழும்புதெற்கில் தமிழ் மாணவிகளுக்கென ஒரு தனியான பாடசாலை ஆரம்பிக்கப்படுமென கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ் மாணவர்கள்மீது பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் பற்றி ஆராய்வதற்காகநியமிக்கப்பட்ட பார்லிமெண்டரி உபகமிட்டியிடம் மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கல்லூரியை ஆரம்பிப்பதற்குப் போதிய நிலம் தாமதமின்றிக் கிடைத்தால் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான வேலைகளை மேற்கொள்ளலாமெனக் குறிப்பிட்டு அவர் கமிட்டியிடம் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு தெற்கிலுள்ள இசிப்பத்தன மகாவித்தியாலயத்தில் தமிழ்ப்பிரிவை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வெள்ளவத்தையிலுள்ளசென். கிளேயர்ஸ் கல்லூரியில் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பாக இருப்பதற்குசிரேஷ்ட தமிழ் ஆசிரியர் நியமிக்கப்படுவார்.

1966ம் வருடம் ஜனவரியிலிருந்து தமிழ் மாணவர்கள் அனுபவித்துவரும் சகல வசதியான சலுகைகளெல்லாம் அவர்களுக்கு மீட்டுத் தரப்படும் என்றும் மந்திரி எடுத்துக்கூறினார்.

## சலவைக்கு கட்டண உயர்வு

சாவகச்சேரி, வியா.

சாவகச்சேரி நகர சபை சலவைத்தொழிற்சாலைக்கு விதிக்கப்பட்ட வரியினால் பொதுமக்கள் தாங்கள் சலவைக்குக்கொடுக்கும் துணிகளுக்கு, ஐந்து சதம் அதிகமாக கொடுக்கவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது.

தென்மராட்சி சலவைத் தொழிலாளர் சங்கம், வரி ரத்துச்செய்யப்படாத பட்சத்தில் ஜனவரி மாதம் 1-ம் திகதி முதல் துணி ஒன்றுக்கு 5 சதம் கூட்டத்தீர்மானித்திருப்பதாக அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

நகரசபைத்தலைவருக்கும், அங்கத்தவர்களுக்கும், வரியை ரத்துச்செய்யும்படி சலவைத் தொழிலாளர் சங்கம் விடுத்தவேண்டுகோள் பயனளிக்கவில்லை யென்றும் இதனால்சிலர் வரியைக்கட்டிவிட்டார்களென்றும் அறியப்படுகிறது.

வருடத்திற்கு 15 ரூபாவாக விதிக்கப்பட்டிருக்கும் சலவைத் தொழிற்சாலை வரி வேறு இடங்களில் அறவிடப்படுவதில்லையென்றும் சலவைத் தொழிலாளர் சங்க அங்கத்தவர் ஒருவர் கூறினார்.

## தென்னாபிரிக்காவுக்கு தடைவிதிக்கவும்

ஐ. நா. டிச. 16

தென்னாபிரிக்காவுக்கெதிராக கட்டாயத் தடைவிதிக்கும் தீர்மானத்தை ஐ. நா. பொதுச்சபை அங்கீகரித்தது ஆதரவாக 80 வாக்குகள் கிடைத்தன. பிரிட்டன் பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் உட்பட 16 நாடுகள் வாக்களிக்கவில்லை. போர்த்துக்கலும், தென்னாபிரிக்காவும் எதிர்த்து [illegible]

## 'நாவலர் நூல்நிலையம் அமைக்கப்பட வேண்டும்'

வவனியா, வியாழன்

''நாவலரை நினைக்கும்போது எமது உள்ளம் உருகிவிடுகிறது. எத்தனையோ அரும் பெரும் நூல்களை யாவரும் இலகுவில் வாசித்தறியும் முறையில் எழுதிய உத்தமர் அவர். அவரது நூல்கள் எல்லோருக்கும் பயன்படத்தக்கவை. இந்த நூல்களையெல்லாம் சேகரித்து சகலரும் அதனால் பயன் பெறத்தக்கவகையில் ஒரு நிலையத்தில் அவற்றை வைத்துப் பாதுகாப்பது மிக்க ஏற்றதொரு கைங்கரியமாக இருக்கும்.''

இவ்வாறு ஓமந்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நாவலர் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய ஓமந்தை மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். கந்தையா கூறினார்.

திரு. கந்தையா மேலும் பேசுகையில், நாவலர் அஞ்சா நெஞ்சம் கொண்டு வாழ்ந்தாரென்றும் தமிழையும் சைவத்தையும் தமது நெஞ்சுரத்தினால் காப்பாற்றினாரென்றும் கூறினார்.

திரு. வே. காத்திரவேல் உட்படப் பலர் உரையாற்றினர். நாவலர் விழாவையொட்டி நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

## "ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் மாணவ ஆசிரியராக நியமிக்குக"

### வேலையற்ற பட்டதாரிகளின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜி. சி. ஈ. பரீட்சையில் பயிற்சிச் சிங்களத்தில் சித்தியெய்திய பட்டதாரிகளுக்கு காலியான இடங்கள் வரும்போது அவர்களுக்குத் தகுந்த பதவிகளை வழங்கவேண்டுமென் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் வேலையற்றிருக்கும் இந்திய விஞ்ஞான பட்டதாரிகள் சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்குத் தலைவர் திரு. எம். கைலாசநாதன் தலைமைவகித்தார்.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளின் விஷயமாக ஆலோசிக்க சகல கட்சித் தலைவர்களையும் சேர்த்து ஒரு மகாநாடு நடந்த முயற்சி எடுப்பதெனவும். புதிய கைத்தொழில் ஒன்றைஆரம்பிக்க முயற்சிப்பதெனவும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றுவிக்க, பட்டதாரிகளை மாணவ ஆசிரியராகத் தேர்ந்தெடுக்குமாறு அரசினரைக் கோருவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பெருங்கதைப் படிப்பு

சாவகச்சேரி, புதன்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலில் பெருங்கதைப் படிப்பு சென்ற வியாழக்கிழமை தொடக்கம் விசேஷ அபிஷேக ஆராதனையுடன் நடைபெறுகிறது.

சங்கீதபூஷணம் திரு. வி. கே. நடராசன், பிரம்மஸ்ரீ எஸ். இராமலிங்க ஐயர், திரு. எஸ். கனகநாயகம், திரு. வி. தம்பிமுத்து ஆகியவர்கள் பிள்ளையார் பெருங்கதையைப் படித்து வருகின்றனர்.

## 'சைவப்பற்றுள்ள சங்கங்கள் வேண்டும்'

பம்பலப்பிட்டி, வியா.

'இளைஞர்களிடையே சைவ சமயப்பற்றை வளர்த்து சைவத்திற்கும் சமூகத்திற்கும் ஆக்கப்பணிபுரியக்கூடிய இளைஞர் ஸ்தாபனங்கள் எம்மிடையேதோன்றவேண்டும். ஏனைய மதவாலிபர் ஸ்தாபனங்கள் போன்று இந்து வாலிபர்களுக்கும் அகில இலங்கைரீதியில் பணியாற்றக்கூடிய நிறுவனம் அவசியம் வேண்டும். இந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கொழும்பு இந்துவாலிபர் சங்கத்திற்கு சைவப் பெருமக்களின் பேராதரவு என்றென்றும் கிடைக்கும்''.

இவ்வாறு பெற்ரோலியம் கூட்டுத்தாபன தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை இந்து வாலிபர் சங்க வளர்ச்சிநிதி உபகாரப் படக்காட்சியை வெள்ளவத்தை 'சபயர்' தியேட்டரில் ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்க உப தலைவர் திரு. வெ. சுப்பையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

## டிராக்டர் டயர், ரியூப் கிடைக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

வர்த்தக அமைச்சருக்கு டிராக்டர் டயர், ரியூப்புகள் தட்டுப்பாடுபற்றியும் அதன் பற்றுக்குறைபற்றியும் யாழ் மாவட்ட கிராம சபை சமாஜம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து டிராக்டர் டயர், ரியூப்புகள் வாங்குவதற்காக அரசாங்கம் 3 லட்சம்வரை ஒதுக்கியுள்ளதாக சமாஜத்தின் தலைவருக்குக் கடிதமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைவப்புலவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் விசேட ஆலோசனைக் கூட்டம் சங்க அலுவலகத்தில் சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா தலைமையில் நடைபெற்றது. தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 60-ம் ஆண்டு மணிவிழாவில் ஓர் அங்கமாக சைவப்புலவர் மகாநாடு நடாத்த முன்வந்திருப்பதாக அறிவித்தமைக்கு சைவப்புலவர் சங்கம் நன்றி தெரிவிப்பதென்றும் அம் மகாநாட்டில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த வருடம் சித்தாந்த பிரவேச, பால, பண்டித தேர்வுகளைச் சைவப்புலவர் தேர்வுகளோடு நடாத்துவதெனவும் அவற்றிற்குத் தோன்றும் மாணவர்களுக்கான கல்விப்பயிற்சியைச் சைவப்புலவர் வகுப்புகளோடு சேர்ந்து நடாத்துவதெனவும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

சைவப்புலவர் சித்தாந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவுமுகமாகப் பாடவகுப்புகளை தைமாதம் தொடக்கம் இலங்கையின் பல பாகங்களிலும் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வழமைபோல் திருவாசக மனனப் போட்டிகளைச் சித்திரை விடுமுறை காலத்தில் நடாத்துவதெனவும் கூட்டத்தில் முடிவு செய்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

கண்ணைக் கவரும் டிசைன்களில் தமிழ் - ஆங்கில ''கிறிஸ்மஸ் கார்ட்டுகள்'' எம்மிடம் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். S. சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1436

### தேவை

சாதுரியம் மிக்க கன்வசர்கள் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாருடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். ஏனைய விபரங்கட்கு: நடராஜா கரேஜ், 42, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1487

கைத்தறி நெசவு வேலையில் 3 வருட அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை. சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நேரில் விண்ணப்பிக்கவும். போடிங் வசதிகள் அளிக்கப்படும். இல. 5, ஜும்மா முஸ்லிம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பாட்டா மேல்மாடி) 1498

புத்தூர் ஆவரங்கால் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்டசாலைப் பகுதிக்கு ஒரு விற்பனையாளர் தேவை. வயது 22—40 கல்வித்தராதரம்: எட்டாம் வகுப்பு (ஆங்கிலம் அல்லது தமிழ்), கூட்டுறவுப் பயிற்சியில் குறைந்தது இரண்டு மாதப் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பிணை ரூ. 250/- சம்பளம்: அடிப்படைச் சம்பளம் ரூ. 60/- அத்துடன் மேலதிக நேரம். மேற்படி சங்கக் காரியதரிசிக்கு 27-12-65-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். 1484

தெல்லிப்பளை தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பண்டகசாலைக்குப் பொறுப்பாக ஒரு உதவி மனேச்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகுதிகளுக்கு அமைவாக மனுப்பண்ண வேண்டும். வயது 21க்கு மேல்-கல்வித்தராதரம் கனிஷ்ட பாடசாலைத் தராதரம் கூட்டுறவுப் பயிற்சி, அனுபவம் பெற்றவர்கள் கவனிக்கப்படும். மாதச்சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100/-( பணியாளர் சேமநிதிச் சலுகை உண்டு) உரொக்கப் பிணை ரூபா1000/-. ஆதனப் பிணை ரூபா 2500/-. தராதர நற்சாட்சிப்பத்திரங்களுடன் தலைவர், தெல்லிப்பளை, தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பன்னாலை, தெல்லிப்பளை என்ற முகவரிக்கு 27-12-65க்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் மனுப்பண்ணுக. 1499

பெற்றோல் ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் தேவை. ரொக்கப் பிணை ரூ. 1000/-. ஆங்கிலஅறிவும் அனுபவமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் செய்பவர் கீழ்க் கண்ட முகவரியிலுள்ளவருடன் தொடர்பு கொள்ளவும். இ. மூர்த்தி, 107, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1602

நெசவு தொழில் தெரிந்த தொழிலாளரும், ஆசிரியர் ஒருவரும் தேவை. விண்ணப்பிக்கவும்: நவஜீவன் நெசவுசாலை, வத்திராயன், செம்பியன்பற்று. 1603

### கல்வி

இலவசபிரத்தியேக கல்வி. விஞ்ஞான கலைவகுப்புக்கள். 10-ம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். அதிபர், ஆனந்த ஜோதி அக்கடமி, பூதராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். 1493

### விற்பனைக்கு

(Exide Batteries) எக்சைட் பற்றறிகள் எங்களிடம் சுலபமான தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1422

22 சிறீ 3000 தொடர் வரிசையிலுள்ள 2 டொன் லொறி விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. தொடர்பு கொள்ளவும். 127, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1488

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலைக்கு எதிராக யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் காணி 6 பரப்பும், வீடும் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு நேரில் அறியவும். க. நவரத்தினம், மூனாமலை ஒழுங்கை, மானிப்பாய். 1500

சிறந்த முறையில் வேலை செய்யப்பட்ட கைத்தறிகள் 60''-36'' அளவுகளில் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம். ஒடருக்கும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். அம்பிகா தச்சுத் தொழிற்சாலை, 110, பாங்(சால் வீதி, சின்னக்கடை,) யாழ்ப்பாணம். 1601

### வாடகைக்கு

கிளிநொச்சியில் கண்டி வீதியில் வியாபாரப் புழக்கமுள்ளவிடத்தில் கடையொன்று சகல தளபாடங்களுடன் உடன் வாடகைக்கு உண்டு. விபரத்துக்கு: க. சுந்தரேஸ்வரன், 110, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்க. 1494

## தபால் ஊழியர் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் அரசாங்க சேவையர்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் தபால் ஊழியர் கோஷ்டி தமது முதலாவது விளையாட்டில் அக்புதமாக விளையாடி யாழ். கலால் கோஷ்டியைத் தோற்கடித்தது.

தபால் ஊழியர் கோஷ்டி யோசப்பின் தலைமையிலும் கலால் கோஷ்டி ரட்ணயக்காவின் தலைமையிலும் விறுவிறுப்பாக மோதின. போட்டி ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களுக்குள் தபால் ஊழியர் கோஷ்டியின் வலது முன்னணி வீரரான எம். சந்தியா மின்னல் வேகத்தில் முதலாவது கோலைப் போட்டார். வெகு வேகமாக ஒடி பந்து கொண்டுசெல்ல வல்லவரான இவ்வீரரே இரண்டாவது கோலையும் போட்டார். இடைவேளையின் போது கலால் கோஷ்டியினர் ஒரு கோலும் போடாத வகையில் தபால் ஊழியர் கோஷ்டியினர் 2 கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளையின் பின்பும் தபால் ஊழியர் கோஷ்டி கோல்களை ஒன்றின்பின் ஒன்ருகப் போட்டனர். தபால் ஊழியர்கோஷ்டியின் பின்னணி வீரர்களான அரசகுமார், சூசைப்பிள்ளை ஆகியோர் திறமையாக விளையாடினர். தபால் ஊழியர் கோஷ்டியின் முன்னணி வீரர்களான யேசுதாசன் 2 கோல்களையும், குணரத்தினம் ஒரு கோலும் பெற்று யாழ். தபால் ஊழியர் கோஷ்டி யாழ். கலால் கோஷ்டியினரை 5-0 கோல்களால் வெற்றிவீட்டியது.

## நாவாந்துறை சென். மேரிஸ வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் குருநகர் பாடுமீன் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் 'பி' பிரிவுக் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பத்தில் குருநகர் பாடுமீன் கோஷ்டியினர் மிகவும் ஆர்வமாக விளையாடினர். எனினும் சென். மேரிஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் இரு கோல்களை முதலில் லாவகமாகப் போட்டனர்.

இடைவேளையின் பின் போட்டியில் சுறுசுறுப்புக் காணப்பட்டது. இறுதியில் சென். மேரிஸ் 'பி' பிரிவு 6-0 கோல்களால் வெற்றி பெற்றது.

வைத்தீஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. இம்மனுவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஐயாறன்

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

ஞக்கி, சைவத்தைப் பாதுகாத்தார். அவர் மதுரையில் ஸ்தாபித்த திருஞான சம்பந்தசுவாமிகள் ஆதீனத்தின் 291-வது பட்டத்து குருமகா சன்னிதானம் இந்தப் பணியைச் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

தீண்டாமை உள்ளிட்டு சாதிக் கொடுமைகளே, இந்துசமயத்திலிருந்து மதம் மாற பலருக்கும் முக்கிய காரணமாகும். தீண்டாமை மனித அடிப்படை உரிமைக்கும் மாருகும். அதை ஒழிக்க சைவசமய ஸ்தாபனங்கள் முற்படின், சைவத்தைப் பாதுகாக்க அது பெரிதும் பயன்படும். தீண்டாமை நீடித்தால், இந்து சமயம் அழிந்துவிடுமென்று மகாத்மாகாந்தி அடிகள் சரியாக எச்சரித்துள்ளார்.

ஃ ஃ ஃ

இந்துக்களென் போரில் பலரும் பெயரளவில்தான் அவ்விதமுள்ளனர். 8 வயதுக்குள் சைவன் சிவ தீட்சை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினர் நாவலர்பெருமான். அதன்படி எவ்வளவு சைவர் செய்கின்றனர். சில வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது நிலைமை தேவலாம். சமீபத்தில் யாழ்ப்பாணத்திலே ஒரு பள்ளி மாணவர்களைக் கேட்டதில், தீட்சை எடுத்ததாகப் பல மாணவர்கள் கையுயர்த்தினர். ஆனுல் எல்லாச் சைவர்களும் இவ் விஷயத்தில் நாவலர் பெருமானின் கட்டளையை எப்போது பின்பற்றப்போகிருர்கள்? இதற்கு உணவுமுறை ஒரு தடையாக இருக்கத் தேவை இல்லை, ''குலமிலராயினும் குலத்துகேற்பதோர் நலமிகக் கொடுப்பது நமசிவாயவே'' என்று உறுதி கூறுகின்ருர் அப்பர் அடிகளாரும்.

ஃ ஃ ஃ

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி செல்லாத செல்வமுடையாய் போற்றி, ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி ஆகாயவண்ணமுடையாய் போற்றி, வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி வேளாத வேள்வியுடையாய் போற்றி, கையார் தழலார் விடங்கா போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி.

— அப்பர் அடிகள்.

மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. யதுக்குல சிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

### கொல்லங்கலட்டி விநாயகர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்திய கட்டிட வேலை

கொல்லங்கலட்டி விநாயகர் பலநோக்கக் கூட்டுறவு சங்கத்தின் தலைவரால் புதிய கட்டிட வேலைக்கு'சீல்'வைக்கப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிட்ட கேள்விகள் 6 ஜனவரி 1966 (6-1-66) பிற்பகல் 5-30 வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கட்டுப்பணமாக 110 ரூபா செலுத்தியபின் சங்கத்தின் முகாமையாளரிடமிருந்து 5 ஜனவரி 1966 (5-1-66) நண்பகல் 12 மணி வரையும் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவத்தில் கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் தேவையான ஒப்பந்தம் செய்ததும், கட்டுப்பணத்திலுள்ள 100 ரூபா திருப்பிக் கொடுக்கப்படும்.

3. இதர விபரங்களை சங்கத்தின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வ. சரவணமுத்து,
தலைவர்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
14-12-1965. 1501

## தேவை

உருத்திரபுரம் ப. நோ. ஐ. சங்கத்தின்டி-10பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. பின்வரும் தகைமையுடையோர் கீழ்க்காணும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

1. முழுப்பெயர்.
2. நிரந்தர விலாசம்.
3. வயது - 25—35.
4. தராதரம் - எஸ். எஸ். சி. தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமையும் கூட்டுறவுக்கலாசாலை சாதாரண பயிற்சிப் பத்திரமும் பெற்றிருத்தல் வேண்டும்.
5. சம்பளம் - ரூபா 100/- எல்லாம் உட்பட.
6. பிணை - ரூபா 1000/- உரொக்கம், ரூபா 2000/- ஆதனம்.

அண்மையிற் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் 24-12-65 வரைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிப்போர் நேர்முகப் பரீட்சைக்கு 27-12-65 காலை 10-00 மணிக்கு தோற்ற வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் 31-12-65 நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாகப் பிணையைக் கட்டி 1-1-66-ல் வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் தலைவர், உருத்திரபுரம் பலநோ. ஐ. சங்கம்- உருத்திரபுரம் என விலாசமிட்டு அனுப்பவும்.

ச. அப்புத்துரை,
காரியதரிசி,

உருத்திரபுரம் ப. நோ. ஐ. சங்கம்.
1505

## அடிக்கல்நாட்டு விழா

துணுக்காய், வியாழன்

யோகபுரம் 1-ம் பகுதி பலநோக்கக்கூட்டுறவுச் சங்கத்தின் 1-ம் யூனிற்கிளைச் சங்கத்திற்குரிய அடிக்கல்லை யாழ்ப்பாணம் தெற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி நாட்டிவைத்தார். இப் புதிய கட்டடம் ரூபா 17 ஆயிரம் செலவில் கட்டப்படவிருக்கிறது.

## யாழ்ப்பாணம் மாநகரசபை: கேள்வி விளம்பரம்

29-12-65ம் திகதி பகல் 12 மணிவரை பின்வருவனவற்றை விநியோகம் செய்வதற்கு கேள்வி விளம்பரங்கள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. எஸ்லொன் பைப்ஸ்.
2. லொறிக்குரிய ரயர்களும் ரியூப்புகளும்.

(2) ஒவ்வொன்றிற்கும் ரூ.55 செலுத்தி 27-12-65ம் திகதி பிற்பகல் 3 மணி வரை என்னுல் கொடுக்கப்படும் கேள்விப்பத்திரத்தில் விண்ணப்பம் செய்யவேண்டும்.

(3) கீழே ஒப்பமிடப்பட்டவரிடம் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
(ஹட்சன் செல்வராசா)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
டிசம்பர் 15, 1965.
1504

## மட்டக்களப்பில் நாடக விழா

மட்டக்களப்பு, வியா.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மண்டபத்தில் வருகிற சனிக்கிழமை நாடக விழா நடைபெறவிருக்கிறது கிழக்கிலங்கையைச் சேர்ந்த பல்வேறு நாடக மன்றங்கள் மேற்படி விழாவில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

நாடக விழாவில் ஐந்து ஒரங்க நாடகங்கள் தெரிவு செய்யப்படும். முதல் மூன்று நாடகங்களுக்கும் தங்கப் பதக்கமும். இரண்டு நாடகங்களுக்குபாராட்டு பத்திரமும் வழங்கப்படும்.

மட்டக்களப்பு பாராளு மன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி விழா ஏற்பாடுகளை 'நடமாடி' நாடக மன்றத்தினர் செய்துவருகின்றனர்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 6மணி முதல் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் ஸ்ரீமதி சி. எஸ். எஸ். மணிபாகவதர் மாலை 6 மணி முதல் 'மாபாரதத் தொடர்ச்சி' கதாப்பிரசங்கம். இரவு 7 மணிக்கு உற்சவம்.

நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'பெரியபுராணத்தொடர்ச்சியை' பிரசங்கம் செய்வார்.

நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் மாலை 7 மணிமுதல் திரு. த. சுப்பிரமணியம் 'திருநாவுக்கரசு நாயனுர்' என்னும் பொருள் பற்றிப் பிரசங்கம் செய்வார்.

## மார்கழி மாத பஜனை

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை 5-30 மணியளவில் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவைப் பஜனை நடைபெறும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக சம்பவம்

# ஒருவர் கமிஷன் விசாரணை செய்யும்

வெள்ளவத்தை, புதன்

இன்று கூடிய மந்திரிசபையில், சென்ற சனிக்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழக சம்பவம்பற்றி விசாரணை செய்ய ஒருவர்கொண்ட கமிஷனை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது.

இன்று மந்திரிசபை கூடிய போது பல்கலைக்கழக சம்பவம் பற்றி காரசாரமாக விவாதிக்கப்பட்டது. சம்பவம் குறித்து கல்வி மந்திரி சமர்ப்பித்த அறிக்கையையும் மந்திரிசபை வெகு கவனமாகப் பரிசீலனை செய்து விவாதித்தது.

பல்கலைக்கழக சம்பவம் குறித்து கமிட்டி நியமிப்பதா அல்லது கமிஷன் நியமிப்பதா என கருத்து வேற்றுமை இருப்பதாக முன்னர் கூறப்பட்ட பொழுதிலும் ஒருவர் கொண்ட கமிஷனை நியமிப்பதெனஈற்றில்முடிவு செய்யப்பட்டது. கமிஷனரின் பெயரை அநேகமாக இரண்டு தினங்களுக்குள் கவர்னர் ஜெனரல் வெளியிடுவார் என நம்பப்படுகிறது.

சம்பவத்துக்கான காரணங்கள் மாணவர்களின் பங்கு, நிர்வாகத்தினர் ஒழுங்கீனமாக நடந்துகொண்டார்களா? வெளிக்காரணங்கள், சம்பவம் ஏற்படுவதற்கான புறச்சூழல்கள் என்பனபற்றி கமிஷன் விசாரணை நடத்தும்.

# 'நாவலர் இலட்சியங்களை பரவச்செய்ய வேண்டும்'

## உதவி வித்தியாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

''நாவலரது இலட்சியங்களை எல்லா நாடுகளிலேயும் பரவச் செய்து வளர்த்து வரவேண்டியது சைவ மக்களாகிய எமது கடமையாகும்''.

இவ்வாறு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாவலர்தின விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சைவம் என்றால் என்ன? விபூதி ஏன் அணிய வேண்டும்? என்ற நெருக்கடியான காலத்தில் நாவலர் தோன்றினுர். தமிழ் மக்களைத் தட்டியெழுப்பினுர். தமிழ் சமய நூல்களை வெளியிட்டும் பாடசாலைகளைக் கட்டியும் அருந்தொண்டாற்றினுர். அவர் செய்த பணிகளை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியாவிலும் இவர் புகழ் பெற்றுர். இன்று ஈழநாட்டில் நாவலர் ஞாபகமாக முத்திரை வெளியிடும் அளவுக்கு அவர் புகழ் பரவியுள்ளது நமக்கெல்லாம் பெருமையளிப்பதாயிருக்கின்றது என்றும் கூறினுர்.

வித்துவான் திரு. க. கி. நடராசன் பேசுகையில், 'நாவலர் தமிழ் சமயத் தொண்டுகளுடன் நாட்டுக்கும் பணி செய்தார் என்றும் அரசியல் துறையில் ஈடுபட்டு சேர் பொன் இராமநாதனை சட்டசபைக்கு அனுப்பி வைத்த பெருமை நாவலர் ஒருவருக்கே உரியதாகும் என்றும் கூறினுர்.

தலைமையாசிரியர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு பாடசாலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

வியாகரண சிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகளாலும், வேதாகம வகுப்பு மாணவர்களாலும் வேத அத்தியாயனம் செய்யப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் கலாநிகழ்ச்சிகளும் நடைபெற்றன,

சங்கீத பூஷணம் திரு. சோ. கோவிந்தராசாவினுல் திருமுறைப்பாடல்கள் பாடப்பட்டன.

ஆசிரியர் சி. சிவரத்தினம் அனைவர்க்கும் நன்றி கூறினுர்.

# மதத்தையும் கலாச்சாரத்தையும் காத்த தேசீய வீரர்

## நாவலருக்கு தேசாதிபதி புகழஞ்சலி

வெள்ளவத்தை, புதன்

''உண்மையான தலைவர்கள் தேவைப்பட்ட ஒருகால கட்டத்தில் இந்து சமூகத்தில் நாவலர் தோன்றினுர் இந்த நாட்டு மக்களின் மொழி, கலாச்சாரம், மதம் என்பன வீழ்ச்சியடைந்து வந்த நிலையில் அனகாரிக தர்மபாலா, ஆறுமுகநாவலர் இரு தேசியத் தலைவர்களும் அதை திடங்கொண்டு தடுத்து நிறுத்தினர்.'

இவ்வாறுமகாதேசாதிபதி வில்லியம் கோபல்லவா அரசாங்க ஊழியர் கொண்டாடும் நாவலர் நினைவு விழாவைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திரு. ச. சிற்றம்பலம் தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் விழா நடைபெற்றது.

ஆறுமுகநாவலர் போன்றோர் அன்று தோன்றியிராவிட்டால் தமது நாடு பழைய பாரம்பரிய கலாச்சாரத்தைப்பற்றி உணராது அறியாமையில் ஆழ்ந்திருக்கும் எனவும் திரு. கோபல்லவா குறிப்பிட்டார். திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஈ. எம். வி. நாகநாதன், எஸ். ஏ. விக்கிரமசிங்கா, லெஸ்லி குணவர்த்தனு, எம். சிவசிதம்பரம், மு' திருச்செல்வம், எஸ். தொண்டைமான் உட்படப் பலர் உரையாற்றினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# தேர்தல் ஆட்சேப மனுக்கள் தள்ளுபடி

வெள்ளவத்தை, புதன்

பண்டாரஹம, கொலன்னுவை, அத்தனகலை ஆகிய தேர்தல் தொகுதிகளில் வெற்றியீட்டிய எம். பி. களுக்கு எதிராக தொடரப்பட்ட தேர்தல் ஆட்சேப மனுக்கள் இன்று விசாரணையின் பின்தள்ளுபடி செய்யப்பட்டன.

# விஞ்ஞான ஆராய்ச்சிக்கு தனியமைச்சு?

வெள்ளவத்தை, புதன்

தொழில்நுட்ப, விஞ்ஞான ஆராய்ச்சி, அதுசம்பந்தமான மற்றும் பகுதிகளையும் இணைத்து ஒரு தனியார் அமைச்சை நிறுவ தாம் ஆலோசித்துவருவதாக பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்க இலங்கை பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்தின் 21-வது ஆண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

# பறிமுதலான ஜவுளி விற்பனையாகியது

வெள்ளவத்தை, புதன்

பதுக்கி வைத்திருந்த தனியார் ஸ்தாபனங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 5000 யார் துணியும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விசேஷ கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் இன்று பொதுமக்ளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

# ஐ. நா. மண்டபத்தில் இலங்கை ஓவியம்

நியுயோர்க், டிச. 15

இலங்கையின் பிரபல ஓவியரான சேனகா சேனநாயக்காவின் சித்திரம் ஒன்று ஐ. நா. தலைமைக்காரியாலயத்தின் தெற்கு வாசலில் தொங்கவிடப்படும். இந்த ஓவியம் நாளை திரைநீக்கம் செய்யப்படும். செல்வன் சேனகாவின் ஓவியத்தை இலங்கை அரசாங்கம் ஐ. நா வுக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் சார்பில் நிரந்தரப் பிரதிநிதி திரு. டி. எஸ். ஜயரத்ன சேனகாவின் ஓவியத்தைப் பொதுக்காரிய தரிசியிடம் கையளித்தார்.

# "தேசிய சேமிப்பின் அவசியம்"

வவனியா, வியாழன்

நாட்டில் ஜனநாயக ஆட்சி நிலைக்க மக்கள் மனதில் சேமிப்பு உணர்ச்சி இன்றியமையாதது'' என்று வவனியக மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பி. டி. தசநாயக்கா கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வருடம் 66 / 67ல் வவனியா மாவட்டத்தை பொறுத்த அளவில் தேசிய சேமிப்பு இலக்கு 3 1/2 இட்சம் ஆகும்.

இவ்வைபத்தில் கிராம சபை அங்கத்தவர்கள், தலைவர்கள், கிராமமுன்னேற்றச் சபை அங்கத்தவர்கள், கூட்டுறவு சங்க அங்கத்தவர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள் ஆகியோர் உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில், இம்மாவட்டத்தில் வசிக்கும் பாட்டாளி வர்க்க விவசாயிகள் தமது அறுவடை காலத்தில் தலைக்கு ஒரு புசல் நெல்லோ அதன் பெறுமதியையோ தேசிய சேமிப்புப் பத்திரம் வாங்குவதில் செலவிட்டால் நல்ல பயனைப் பெற வாய்ப்பு உண்டாகலாம் என்று சொன்னுர்.

உதைபந்தாட்டம்

# யாழ். மாநகரசபைக்கோஷ்டி-கல்விப் பகுதிக் கோஷ்டி மோதல்

## சமமான முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாழ். மாவட்ட அரசாங்க சேவை விளையாட்டுச்சங்கத்தின் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய யாழ். மாநகரசபைக் கோஷ்டியும் கல்விப்பகுதியும் ஆட்ட முடிவில் வெற்றி தோல்வியின்றி சமமான நிலையை அடைந்தனர். விளையாட்டுஆரம்பத்தில் இருந்து முடியும்வரை விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இடைவேளைக்குமுன் நடந்த போட்டியில் முதலாவது கோலை மாநகரசபைக் கோஷ்டியின் இடது முன்னணி வீரரான சு. முத்துராசாவின் உதவியுடன் மத்திய முன்னணி வீரரான வரதராசா மின்னல்வேகத்தில் உதைத்துத் தள்ளினுர். இடைவேளையின்போது கல்விப்பகுதியினர் அடிக்காத வகையில் மாநகரசபைக் கோஷ்டி ஒரு கோல் பெற்றிருந்தது.

இடைவேளைக்கு பின்பு நடைபெற்ற போட்டியில் கல்விப்பகுதியின் முன்னணி வீரரான ரனிஸ்லோ இடது முன்னணி வீரரான ரட்னசிங்கத்தின் உதவியுடன் வெற்றிகரமாக ஒரு கோலை உதைத்தார். இப்போட்டி முடிவில் இரு கோஷ்டியும் 1—1 கோல்கள் பெற்று வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. வெற்றி முடிவு காண்பதற்காக மீண்டும் 10 நிமிடங்கள் போட்டியிட்டனர். எனினும் வீரர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். மாநகரசபைக் கோஷ்டியின் வீரர்களான அ. முத்துராசா, மரியநாயகம், சிறில், கோல்க்காப்பாளர் தவராசா ஆகியோர் பாராட்டுக்குரியவர்களாகும். இப் போட்டியிலும் ஒரு கோஷ்டியுமே கோல் போடவில்லை.

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு மத்தியஸ்தம்வகித்த ஈ. கே. குமரையா இவ் விளையாட்டுப் போட்டியின் முடிவை விளையாட்டுச்சங்கம் முடிவு செய்யுமென அறிவித்தார்.

காங்கேசன்துறை

# சீமெந்து தொழிற்சாலை கோஷ்டி கடற்படையை வென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டிக்கும்காரைநகர் கடற்படைக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சீமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டி வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களுக்குள் கடற்படைக் கோஷ்டிக்கு ஒரு பனுல்டி கிடைத்தது. எனினும் அதை எதிர்கோஷ்டிக் கோல்காப்பாளர் பாய்ந்து வெகு அழகாகப் பிடித்தது அவரது திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. சீமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டியின் முதலாவதுகோலை ஒரு கடற்படை வீரரே அடித்துக் கொடுத்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இடைவேளைக்கு முன்னர் சீமெந்துத் தொழிற்சாலை வீரர்கள் சிவலிங்கம் அன்ரணிப்பீற்றர்ஆகிய முன்னணி வீரர்கள் அடுத்து இருகோல்களைப் போட்டனர். எனினும் சீமெந்துத் தொழிற்சாலைக்கோஷ்டியின் முன்னணி வீரரான நாகரத்தினம், குமாரசாமி ஆகிய வீரர்கள் ஆளுக்கொவ்வொரு கோல்கள் போட்டார்கள். சீமெந்துத் தொழிற்சாலைக் கோஷ்டியினர் மேலும் ஒரு கோல் போட்டு 6—2 கோல்களால் கடற்படை வீரர்களைத் தோற்கடித்தனர். இப் போட்டியில் கடற்படை வீரர் சிறந்த 'பாசிங்' விளையாட்டைக் கடைப்பிடித்த போதும் கோல்காப்பாளரின் கவலையீனங்களே இவர்களுடைய தோல்விக்குக் காரணம் என்று சொல்லலாம்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## தமிழ் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. நாகநாதன் பேசுகையில் ''நாவலரின் நாவலர் பாடசாலை அரசாங்கத்தின்கீழ் மூன்ருந்தர பாடசாலையாக்கப்பட்டதால் அவரின் நோக்கம் பூரணமடையாது போய்விட்டது. நாவலரின் சங்கம் சட்டபூர்வமாக்கப்பட்டு அதன் மூலம் தமிழ்மொழி, கலாச்சாரம், தமிழர் சுதந்திரம் பாதுகாக்கப்படல் வேண்டும். நாவலரின் வழியே கலாச்சார பல்கலைக்கழகம் அமைக்கப்படல் அவசியமாகும்'' என்று குறிப்பிட்டார்.

இதன்பின்னர் நாவலருக்கு அஞ்சலி என்னும் கவியரங்கிற்கு திரு. கே. எஸ். நடராசா தலைமைவகித்த போது முருகையன், மஹாகவி, அம்பி, திமிலைத்துமிலன், நுஃமான், பா. சத்தியசீலன் ஆகியோர் பங்குபற்றினர்.

''நாவலர்நினைவு'' என்பதுபற்றி கா. பொ. இரத்தினம் எம். பி.யும் ''நாவலரும் விடுதலை இயக்கமும்'' என்பதுபற்றி ஜனுப் ஏ. எம். ஏ. அசீஸும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் திருமதி கமலா ஜோன்பிள்ளையின் மாணவிகளாகிய செல்விகீதாதுரை, ஹேமலதா ஜெயம், பிருந்தகுமாரி தியாகராஜா, ஆனந்தலட்சுமிஹரிகரய்யர் ஆகியோரின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

## பழிக்குப்பழி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் ஜோன்ஸன் நிர்வாகம் செயலாற்றினுல், சகல பாரதூரமான விளைவுகளுக்கும் அமெரிக்காதான் பொறுப்புவகிக்கவேண்டியிருக்கும்.

'உலக மக்களுடன் சீன மக்கள் ஒன்றுசேர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இரத்தத்திற்கு இரத்தம் எனப் பழிவாங்கும் நாள் அதிக தூரத்திலில்லை, என்றும் சீனு கூறியுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளி விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org